[1974 மார்ச் 22

* 558—**திரு. நா. வீராசாமி**
திரு. கே. எ. வகாப் } மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில், வடார்க்காடு மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம் மேற்கொண்டுள்ள பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ் நாடு குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று வாரியம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1972-73-லும் 1973-74-லும் மேற்கொண்டுள்ள பணிகளின்விவரம்—

1. ஆம்பூர் குடிநீர் வழங்கு திட்டம்

2. திருப்பத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்

3. வாணியம்பாடி குடிநீர் வழங்கு திட்டம்

4. மேல்விஷாரம் குடிநீர் வழங்கு திட்டம்

5. காவேரிபாக்கம் குடிநீர் வழங்கு திட்டம்

6. போளூர் குடிநீர் வழங்கு திட்டம்

7. குடியாத்தம் குடிநீர் வழங்கு திட்டம்

8. திருவண்ணாமலை குடிநீர் வழங்கு திட்டம்

9. வந்தவாசி குடிநீர் வழங்கு திட்டம்

10. சோளிங்கபுரம் குடிநீர் வழங்கு திட்டம்

11. அரக்கோணம் குடிநீர் வழங்கு திட்டம்

12. பள்ளிக்கொண்டான்பட்டி—சின்னகாங்கையனூர் குடிநீர் வழங்கு திட்டம்

13. நல்லம்பிள்ளைபேட்டை குடிநீர் வழங்கு திட்டம்

14. காட்பாடி பிற கிராமங்களுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கு திட்டம்

15. திருவேத்திபுரம் குடிநீர் வழங்கு திட்டம்

16. பேரணம்பட்டு குடிநீர் வழங்கு திட்டம்

1974 மார்ச் 22]

(முற்பகல் 9-30)

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் படித்த பட்டியலில் ஆற்காடு நகர மன்றம் இல்லை, விளாப்பாக்கம் இல்லை, கலவை இல்லை, திமிரி இல்லை. 71-ஆம் ஆண்டே குடிநீர் வழங்கு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு தொகையைக் கட்டச் சொன்னார்கள். இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகிறது. இன்னும் குடி தண்ணீர் வரவில்லை. எனவே நகர மன்றமாக இருக்கின்ற ஆற்காடு போன்ற பெரிய நகரங்களிலாவது உடனடியாக இதை அமலாக்க வேண்டும். தவிரவும், நான் சொன்ன விளாப்பாக்கம், கலவை, திமிரி ஆகியவைகளையும் எடுத்துக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்கள் தவிர புதிதாகத் திட்டங்கள் தொடங்கப்பட வேண்டுமானால் அதற்கான நிதி வசதி எந்த வகையிலே அமைகிறது என்பதைபற்றிப் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசோ அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகமோ தருகின்ற நிதி வசதியின் அடிப்படையில்தான் ஆற்காடு வரும், பக்கத்தில் திமிரி, கலவை வரும். இன்னும் சொல்ல வேண்டுமானால், எவ்வளவு திட்டம் ஆகிறது என்ற விவரங்கள் இந்தக் கேள்வியில் சொல்ல வேண்டிய அவசியமில்லையாதலால் அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டால் விவரம் தரப்படும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்த ஆற்காடு, இராணிப்பேட்டையைத் தனித்தனியாகப் பிரித்து இரண்டு குடிநீர் திட்டங்களை ஏற்படுத்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருப்பதாக அறிகிறோம். அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மேல்விஷாரம், வந்தவாசி ஆகிய இடங்களுக்கு நல்ல குடிநீர் வசதி கொடுத்திருந்தும் அதை இன்னும் அமலாக்காததால் கஷ்டமாக இருக்கிறது. மேல்விஷாரத்தில் இன்னும் பூரணமாக அமல்படுத்த முடியாமல் பைலட் ஸ்கீம் அளவிலேயே இருக்கிறது. அதில் கட்டப்பட்டிருக்கும் குடி தண்ணீர் டேங்க்கூட சரியாகக் கட்டப்படாததால் பல குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அரசு உடனடியாக அதைப் பரிசீலித்துச் சீர்திருத்து வதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 22

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இதிலே, மேல்விஷாரத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய பரீட்சார்த்த திட்டம் என்ற முறையில் தண்ணீர் வழங்கப்படுவதே தவிர, தொடர்ந்து அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

The pilot water supply has been effected from November 1972. The remaining works such as ground level service Reservoir II of headworks are in progress.

என்று தெரிவித்திருக்கிறார்கள், தொடர்ந்து அந்தப் பணி முறைப்படி நிறைவேற்றப்படும். அதற்குப் பிறகுதான் மேல் விஷாரத்திற்குத் தகுந்த பலன் கிடைக்கும். இராணிப்பேட்டை, ஆற்காடு பற்றி இதில் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

* 559 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலை பூர்த்தியாகிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் செலவாகியுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இரயில்வே பாதையின் குறுக்கே ஒரு இடத்தில் வினியோகக் குழாய் பதிக்கும் பணி தவிர, குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

(இ) டிசம்பர் 1973 முடிய இத் திட்டத்திற்குச் செலவான ரூபாய் 10,36,514.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, வேலைகள் முடிந்ததும் இன்னும் பொது மக்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்பட வில்லை. அதற்கு என்ன காரணம்? அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒப்படைக் கப்பட்ட வேலைகள் முடிந்து நகரசபையில்கூட பெரும் பகுதி